## செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

**நடத்தும்**

# தமிழ் மருத்துவ மரபுகள்

# HERITAGE OF TAMIL MEDICINE

## பயிலரங்கம்-04

**(13-05-2024 முதல் 22-05-2024 வரை)**

## அறிவிப்பும் அழைப்பும்

உலகெங்கினும் வழங்கிவருகின்ற ஆயிரக்கணக்கான மொழிகளில் மிகப் பழைமையான மூல மொழிகளாக விளங்கக்கூடிய சிலவற்றில் செம்மொழித் தமிழிற்குத் தனித்தன்மை வாய்ந்த சிறப்புகள் பலவுள. அவற்றில் தமிழுக்கே உரித்தான துறைகளாகத் தமிழ் வானியல் மரபு, தமிழ்க் கணிய மரபு, தமிழ் மெய்யியல் மரபு, தமிழ் வேளாண்மை மரபு, தமிழ் மருத்துவ மரபு, தமிழ் நடன மரபு, தமிழிசை மரபு, தமிழ்க் கட்டடக் கலை மரபு என்பனவாக அவை நீளும்.

மேற்கண்ட சிறப்பிற்குரிய மரபுகளில் மாந்த இனத்தின் அகப்புற நலவாழ்விற்கும் போற்றுதலுக்கும் உரியதாக விளங்குவது தமிழ் மருத்துவ மரபாகும். பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் உளவியல் குறிப்புகள் உள்ளன. சித்த மருத்துவம் தலையாயதாகப் போற்றும் அகத்தியர் தொல்காப்பியருக்கு ஆசிரியராக விளங்கினார் என்னும் கருத்தும் தமிழுலகில் நிலவிவருகிறது. சங்க இலக்கியங்கள் பல அரிய மருத்துவச் செய்திகளைக் கூறுகின்றன. கடுகு பெருந்தேவனார், காவட்டனார் (புல்), போந்தைப் பசலையார் (பனை), வெள்ளெருக்கிலையார் எனச் சங்கப் புலவர்கள் மூலிகைகளின் பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளனர். மருத்துவர் தாமோதரனார் என்ற சங்கப் புலவர் மருத்துவம் செய்தொழிலாலேயே அறியப்படுகிறார்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் திருக்குறள் மருத்துவத்திற்கென்றே தனியொரு அதிகாரம் கொண்டுள்ளது. ஏலாதி, திரிகடுகம், சிறுபஞ்சமூலம் ஆகிய நூல்கள் தமிழ் மருத்துவத்தின் பெயராலேயே இயற்றப்பட்டவை. அகத்தியர், நந்தி தேவர், திருமூலர், போகர், புலிப்பாணி, கோரக்கர், கொங்கணர், இடைக்காடர் முதலானோராகப் பதினெண் சித்தர் மரபு தமிழ் மருத்துவத்தினைச் சித்த மருத்துவமாக வளர்த்தெடுத்துள்ளது. சங்க காலத்திற்கு முன்பிருந்தே தமிழரின் தற்காப்புக் கலைகளோடு தமிழ் மருத்துவமும் தென்கிழக்காசிய நாடுகளுக்கும் சீனத்திற்கும் பரவியது. அகத்தியர், போகர் போன்ற சித்தர்களின் வரலாறே இதற்குச் சான்றாகும். தமிழர்களின் மருந்துப் பொருட்களான சாதிக்காய், மிளகு, பட்டை, இலாமிச்சை வேர், வெட்டிவேர், இஞ்சி, ஏலம், சுக்கு, கருவப்பட்டை, மயிலிறகு, நல்லெண்ணெய் எனப் பல மூலிகைச் சரக்குகள் கிரேக்க, உரோமப் பேரரசுகளின் காலத்திலேயே மேற்கு நாடுகளுக்குச் சென்றன.

உலக மருத்துவத்தில் தமிழ் மருத்துவத்திற்கென்றே பல சிறப்புகளும் தனித்தன்மையும் உண்டு. உலகில் இன்றளவும் மரபு அறுபடாமல் வழக்கில் உள்ள மருத்துவ முறைகளில் தமிழ் மருத்துவமும் ஒன்று. உலகில் வேறெந்தப் பழைமையான மருத்துவ முறைகளிலும் காணப்படாத இரசவாதம், பற்பம், பாசாணம், செந்தூரம் என்னும் மருந்தியல் முறைகள் தமிழ் மருத்துவத்தில் மாத்திரமே உள்ளன. வைத்தியம், வாதம், யோகம், ஞானம் என்னும் நால்வகை அமைப்புகளைக் கொண்ட தமிழ் மருத்துவ மரபுகளின் தொன்மை, தனித்தன்மை பற்றியதாக இப்பயிலரங்கம் நடைபெற உள்ளது.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் சென்ற ஆண்டு முதன்முறையாக இத்தலைப்பின்கீழ்த் தமிழ் மருத்துவ மாணவர்களுக்காக இப்பயிலரங்கம் சிறப்பாக நடத்தப்பட்டது. அதேபோன்று இவ்வாண்டும் செயல்முறையுடன் கூடிய பயிற்றுரையின் மூலமாக நமது தொன்மையான மருத்துவ மரபு முறைகளையும் மரபுசார்ந்த சிறப்புக் கூறுகளையும் கற்பித்தலை முதன்மை நோக்கமாகக் கொண்டு இப்பயிலரங்கம் நடத்தப் பெறுகிறது.

தமிழ் மருத்துவ மாணவர்கள் நேரடியாகப் பயன்கொளத்தக்கவாறு நிகழ்த்தப்பெறவுள்ள இப்பயிலரங்கில் சித்த மருத்துவத் துறை சார்ந்த மருத்துவ அறிஞர்கள், தமிழறிஞர்கள் பயிற்சி அளிக்கவுள்ளனர். தொன்மையான தமிழ் மருத்துவத்தின் மரபுசார் வளம், அறிவு, விழுமியங்களைச் சித்த மருத்துவத்

துறைசார்ந்த முதுநிலை மாணவர்களையும் முனைவர் பட்ட ஆய்வாளர்களையும் இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயன்பெற்றிட அழைக்கிறோம்.

இப்பயிலரங்கமானது 13-05-2024 முதல் 22-05-2024 வரை பத்து நாட்கள் நடைபெற உள்ளது. பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை – 30.
2. பயிலரங்கு நேரம்: முற்பகல் 10.00 – 1.00 வரை, பிற்பகல் 02.00 – 05.00 வரை.
3. பங்கேற்பாளர்களே தங்குமிடத்தை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
4. இந்திய அரசு விதிமுறைகளின்படி பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, நாட்படி வழங்கப்படும்.
5. பகலுணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
6. இணையவழி விண்ணப்பத்தை https://forms.gle/h2zWaqy4VUtsmAy49 என்ற இணைப்பின் வழியாகவோ அல்லது கீழே தரப்பட்டுள்ள விரைவுக் குறியீடு (QR Code) மூலமாகவோ பெறலாம்.
7. இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ள workshope@cict.in என்ற மின்னஞ்சல் மூலமாக மட்டுமே தொடர்புகொள்ள வேண்டும்.
8. விண்ணப்பக் கட்டணம் ஏதும் இல்லை.
9. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பிவைக்க வேண்டும்.
10. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்குப் புலனம்/மின்னஞ்சல் வழியாக ஆணை அனுப்பி வைக்கப்படும்.
11. விண்ணப்பம் வந்துசேரவேண்டிய இறுதி நாள்: **06-05-2024**. இதற்குப் பின்வரும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டா.

12. இப்பயிலரங்கில் பங்கேற்போர் 38 அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ளவேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருவதைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் மற்றும் இடைநிற்றல் இருப்பின் தினப்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.
13. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு **07-05-2024** அன்று மின்னஞ்சல்/புலனம் மூலமாகத் தகவல் தெரிவிக்கப்படும்.
14. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிகளைப் பின்பற்றிட வேண்டும்.